**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-30**

| | |
|---|---|
| Name | திரு.ரவி |
| Husband Name | கோபாலகிருஷ்ணன் |
| Village /Area | சிப்காட், இராணிப்பேட்டை |
| Taluk | வாலாஜா |
| Occupation | உதவி செயற்பொறியாளர் / த.மி.வா/ஓய்வு |
| Age | 62 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 3024 8649 7041 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 06.11.2025.

**எதிரிகள் 3 முதல் 6, 8 முதல் 10, 12, 15 வரை ஆஜர். 7, 11, 13, 14 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை –**

நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து, பணிஓய்வு பெற்று தற்போது இராணிப்பேட்டை சிப்காட், திருவள்ளுவர் நகர், முதல் தெருவில் வசிக்கிறேன். நான் வேலூர், சக்கரமல்லூர் தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக 2007ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். குக்குண்டி கிராமம் சக்கரமல்லூர் மின்வாரிய அலுவலக பிரிவின் கீழ் வருகிறது. கடந்த 18.08.2012 ஆண்டு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் காவல் ஆய்வாளர் என்னை 8 விவசாயிகளின் விண்ணப்பங்கள் சம்மந்தமாக விசாரணை செய்ய அழைத்தார். நான் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் ஆய்வாளர் அலுவலகத்திற்கு அதன்படி

சென்றேன். அங்கு ஆய்வாளர் என்னிடம் 8 விவசாயிகளின் புதிய மோட்டார் மாற்றி கொடுக்ககோரும் விண்ணப்பங்களையும், அதனுடன் இணைந்த மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களையும் என்னிடம் காண்பித்தார். அந்த மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடைய கையெழுத்துக்கள் அல்ல என்று சொன்னேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பட்டாளத்தான் விண்ணப்பத்துடன் உள்ள மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல, அதில் உள்ள முத்திரையும் என் அலுவலகத்தில் உள்ள முத்திரை அல்ல. அதே போன்று பரசுராமன், ஜானகிராமன், துளசி, குப்பன், லோகன், கேசவன், கோவிந்தசாமி ஆகிய விவசாயிகளின் விண்ணப்பத்துடன் உள்ள மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழிகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல, அவைகளில் உள்ள முத்திரைகளும் என் அலுவலகத்தில் உள்ள முத்திரைகள் அல்ல. இந்த விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களை நான்தான் வழங்கியிருக்க வேண்டும். இது சம்மந்தமாக என்னிடம் மாதிரி கையெழுத்துக்களை கிராம நிர்வாக அலுவலர் முன்பாக வாங்கினார்கள். அந்த மாதிரி கையெழுத்துக்களின் சான்றிட்ட நகல்தான் **அ.சா.ஆ.15** ஆகும். (அ.சா.ஆ.15ன் அசல் ஆவணம் இந்நீதிமன்ற SPLCC.19/2025 வழக்கில் உள்ளது). வழக்கு சம்மந்தமாக வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

மின்அழுத்தம் வேறுபாடுகளை குறைப்பதற்காகதான் அரசு

பழைய மின்மோட்டார்களை மாற்றி புதியதாக குறைவாக மின்சார தேவையை கொண்டு பயன்படுகிற மோட்டார்களை மாற்றும் திட்டம் கொண்டுவரப்பட்டது என்றால், சரிதான். அதற்கு எங்கு மின்பளு பிரச்சனைகள் அதிகமாகவோ உள்ளதோ அங்கு முன்னுரிமை அளிக்குமாறு அரசாங்கம் சொன்னது என்றால், சரிதான். அதற்கு ஒருவர் பெயரில் மின்இணைப்பு உள்ளது என தெரிந்தால் மட்டும் போதுமானது என்றால், சரிதான். எனக்கு இதுமாதிரியான படிவத்தில் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று எந்த அரசாணையும் வரவில்லை என்றால், சரிதான். வேறு யாருக்காவது நான் இதுமாதிரி கேட்டதற்கு மின்இணைப்பு உள்ளது என சான்றிதழ் வழங்கினேனா என்றால், நான் சான்றிதழ் கொடுத்திருக்கலாம். அவ்வாறு எத்தனை சான்றிதழ் கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. நான் பணியில் இல்லாமல் உள்ள சமயத்தில் என் பணியை பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் அது மாதிரி சான்றிதழ்கள் கொடுத்திருப்பார்கள் என்றால், சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட 8 சான்றிதழ்கள் போன்று வேறு பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் கொடுத்திருக்கலாம் என்றால், கொடுத்திருக்கலாம் என சாட்சி கூறுகிறார். போலீசார் என்னை விசாரணைக்கு நேரில் வந்து அழைத்தார். அவ்வாறு அழைத்த தேதி எனக்கு நினைவில்லை. வேலூரில் தற்போது மாநகராட்சி அலுவலகம் உள்ள இடத்தின் அருகே அப்போது வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் இருந்தது. அந்த அலுவலகத்திற்கு வருமாறு போலீசார் என்னை அலுவலக முகவரி சொல்லி வரச்சொன்னார்கள். நான் அங்கு செல்லும் போது கிராம நிர்வாக அலுவலர் இருந்தார், அவர் எந்த ஊர் கிராம நிர்வாக அலுவலர் என நான் கேட்கவில்லை. நான் மதிய உணவு நேரத்திற்கு

முன்பு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றேன். நேரம் சரியாக எனக்கு நினைவில்லை. நான் சாட்சி சொன்ன தேதிகள் எனக்கு ஏற்கனவே தெரியும். இன்று காலையில் நான் போலீசாரிடம் கொடுத்த என்னுடைய வாக்குமூலத்தை படித்து பார்த்தேன். நான் சொன்ன நேரத்தில், தேதியில் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால், அது சரியல்ல. வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசாருக்கு பயந்து நான் அலுவலகத்திற்கு சென்றதாகவும், கிராம நிர்வாக அலுவலர் முன்பு கையெழுத்து போட்டதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet